திரு. கே. சொக்கலிங்கம் : தலைவரவர்களே, மினி பஸ் விடுகின்ற திட்டத்தை தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் சென்னையை அடுத்து இருக்கின்ற செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் விரிவு படுத்தும் உத்தேசம் உண்டா? எல்லா மாவட்டத்திற்கும் இவ்வாறு மினி பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற கேள்விதான் ஏற்கெனவே கேட்கப்பட்டு அமைச்சரவர்களும் அதற்குப் பதில் சொல்லிவிட்டார்களே; ஆகவே மீண்டும் கேட்க வேண்டாம்.

விரைவுப் பேருந்துகளில் திரைப்படம் காண்பிக்கும் திட்டம்.

* வினா எண் 198— திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விரைவுப் பேருந்துகளில் திரைப்படம் காண்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) வேறு புதிய பேருந்து தடங்களுக்கும் இத் திட்டம் விரிவாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, (அ) சென்னை—திருவனந்தபுரம், சென்னை—பெங்களூர் ஆகிய தடங்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால இயக்கப்படும் சொகுசு குளுமை விரைவுப் பேருந்துகளில (ஏர் கண்டிஷன்ட் டீலக்ஸ் கோச்சஸ்) திரைப்படம் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இத் திட்டத்தை வேறு புதிய பேருந்துத் தடங்களுக்கு விரிவாக்கும் திட்டம் ஏதும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஆனால் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, நீண்டதூரம் பயணம் செய்கின்ற பயணிகளுக்குப் பொழுது போவதற்கு இது போன்று வேறு ஏதேனும் சாதனங்களைப் பொருத்துகின்ற யோசனை எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, திரைப்படம் காட்டுவதைத்தான் பொழுது போக்க சக் காட்டிக்கொண்டிருக்கிறோம். வேறு எப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்பது தெரியவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கொஞ்சம் யோசனையும் சேர்த்து சொல்ல வேண்டும். பயணிகள் தொடர்ச்சியாக அமர்ந்து கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால் இப்போது தூங்குவதற்குக் கூட ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது. இன்னும் படிப்பதற்குரிய ஏற்பாடு ள் போன்றவற்றைச் செய்யவேண்டும் என்று கேட்கின்ற சூழ்நிலைகள் இருந்தால் அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றது.

1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே சத்தம் சற்று அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. எனவே உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, இப்படி சினிமா காட்டுகின்ற பஸ், சினிமா காட்டுகின்ற பஸ் என்பது பற்றி அடிக்கடி பத்திரிகையில் படித்துக் கொண்டிருக்கிறேன். இந்த சினிமா காட்டுகின்ற பஸ்ஸிலே இரண்டு மூன்று தடவை ட்ராவல் பண்ணினேன். ப்ரொஜக்டர் சரியாக இருந்தால் ஸ்க்ரீன் கிழிந்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஸ்க்ரீன் சரியாக இருந்தால் ப்ரொஜக்டர் சரியாக இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே சினிமாவுக்காகச் சேர்த்து உயர்ந்த ரேட் சார்ஜ் பண்ணுகிறார்கள் அந்த பஸ்ஸிலே, ஆனால் செய்த ப்ராமிஸை நிறவேற்றாமல் இருக்கின்ற காரணத்தால் சினிமாவுக்காகவும் சேர்த்து வாங்கப்படுகின்ற அந்தக் கட்டணத்தைக் குறைக்கத் தயாராக இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, சில நேரங்களிலே பேருந்துகள் செல்கின்ற பாதையிலே அதிகமான அதிர்ச்சி இருப்பதால் ஃபிலிம் கட் ஆகிவிடுகின்றது என்று சொல்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றவேண்டும் என்று இப்போது நடவடிக்கை எடுத்து வீடியோ டேப்புகள் வைத்துக் கொள்ளவேண்டும் என்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அரசாங்கம் இதை எல்லாம் ஒரு பயிற்சியாகத்தான் செய்துகொண்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இதற்குக்கூட ஒத்துழைப்புத் தராமல் பணத்தைத் திருப்பி தர வேண்டும் என்று கேட்கிறார்கள். பல நேரங்களிலே எவ்வளவோ வசதிகளைச் செய்து கொடுத்ததற்குப் பிறகும் அதற்கெல்லாம் பணம் கொடுக்கப்படாமல் இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்திருப்பார்கள்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: தலைவரவர்களே, பொழுது போக்குவது பற்றிய கேள்வி எழுந்தபோது படுத்துக் கொண்டு செல்வதற்கும் வசதிகள் செய்ய முயற்சி இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அதை விளக்குவதற்குக் கொஞ்சம் நேரம் ஆகும். தலைவரவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அது மட்டுமல்லாமல் நாளைய தினமும் இதுபற்றிய கேள்வி வர இருக்கின்றது. ஆகவே அதை இப்போதே சொல்லிவிட்டால் சரியாக இருக்காது. எனவே நேரம் கிடைக்கின்றபோது விளக்கமாகச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் எத்தகைய படங்கள் காட்டப்படு கின்றன. சிவப்பு மல்லி, தண்ணீர் தண்ணீர் போன்ற படங்களைக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவப்புத் துண்டு போட்டிருப்பதால் சிவப்பு மல்லி படம் வேண்டும் என்று விரும்புகிறார்கள். இப்பொழுது வீடியோ—கேசட்டில் ஏறத்தாழ 15 படங்கள் காட்டப்படுகின்றன. இதற்கு முன்னால் 16 எம்.எம். திரையில் போடப்படுகிற படங்கள் கிட்டத்தட்ட 72 படங்கள் காட்டியிருக்கிறோம். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய படங்கள் புதியதாக வந்தவை. எனவே அதைப்போட சிலகாலம் ஆகும். ஆகவே இதற்குப் பின்னால் தான் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பேருந்துகளில் திரைப்படம் காட்டும் பணியை பெங்களூரிலிருந்து மெட்ராஸ் போகும் சில ஏ.சி. வண்டிகளில்தான் காட்டுகிறார்கள். திருவனந்த புரம் போகும் வண்டிகளில் 5 நாட்களில் 1 நாளில் கூட எந்தப் படமும் காட்டப்படவில்லை. அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அதிலே இன்னொரு விஷயம் என்னவென்றால், அந்தப்படங்கள் என்னவென்றே தெரியவில்லை. அலை அலையாகத்தான் தெரிகிறது. அதைப் பார்த்தால் 4 கண்ணாடி போட வேண்டிய நிலை ஏற்படுகிறது. நல்ல டாக்கு மெண்டரி படங்களாக, பரூஸ்லீ படங்களாக போடக்கூடாதா ? முந்தல் நல்லமுறையில் ஒழுங்காக படங்களை ஓட்டுங்கள் இல்லையென்றால், பஸ்ஸை மட்டும் ஓட்டுங்கள். ஆக இந்த நிலையை மாற்ற ஆவன செய்யப்படுமா என்று கேட்க விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேருந்துகளில் பயணம் செய்திருக் கிறார் என்பது தெரிகிறது. மகிழ்ச்சி. படங்கள் சரியாக தெரிய வில்லை என்று சொன்னார். அதற்காகத்தான் இப்போது முறையை மாற்றி வீடியோ கேசட்டைப் போட்டிருக்கிறோம். ஆகையினால் அவர் இனிமேல் 4 கண்ணாடிகள் போடவேண்டிய அவசியம் இல்லை அந்தப் படங்கள் என்ன படங்கள் என்றே தெரிய வில்லை என்று சொன்னார்கள்; தெரியாத பார்க்காத படங்களைத் தான் போடவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன படங்கள் எல்லோரும் பார்க்க வசதியிருக்கிறது. ஆகவே பார்க்க முடியாத படங்களைப் போடுகிறோம் என்று இதை எடுத்துச் சொல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.